

*Photo Credit*: Indika Wanniarachchi

# காலநிலைக்கான தாக்குப்பிடித்தல் மற்றும் ஆரோக்கியமான மனித குடியிருப்புக்களை மேம்படுத்தல்

அண்மையில் சமாதானப் பாதையில் நுழைந்த இலங்கை துரித பொருளாதார அபிவிருத்திப் பாதை ஒன்றிற்குள் நுழைந்துள்ளதோடு, காலநிலை மாற்ற விளைவுகள் அதன் அபிவிருத்தி இலக்குகளை மற்றும் நோக்கங்களை தாமதப்படுத்தலாம் அல்லது தடைப்படுத்தலாம். மனித குடியிருப்புக்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட உட்கட்டமைப்புக்கள் தொடர்பில் இது மிகவும் பொருத்தமானதாகும்.

கிராமம் என வரையறுக்கப்படும் பிரதேசத்திலேயே இலங்கையர் 10 பேர்களில் 7 பேர் இன்னும் வசிக்கின்றார்கள். ஆனால் இவை விரைவாக மாற்றமடைந்து வருகின்றது. அடுத்துவரும் தசாப்தத்தில், மொத்த சனத்தொகையில் பாதிப்பேரிலும் அதிகமானோர் நகரங்களிலும், மாநகரங்களிலும் வசிப்பார்கள் என அண்மைய எதிர்வுகூறல்கள் குறிப்பிடுகின்றன. இது உட்கட்டமைப்பு, பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். ஏன்றாலும், தொழில்வாய்ப்பின்மை மற்றும் வறுமை என்பவற்றை குறைப்பதற்கு நகரமயமாக்கல் உதவுகின்ற அதேநேரம், பொது வசதிகள் மற்றும் சேவைகளுக்கான அழுத்தங்களையும் அது அதிகரிக்கச் செய்யும்.

இத் தேவைகளை எதிர்கொள்வதற்கு பாரிய புதிய முதலீடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மனிதக் குடியிருப்புக்கள் மற்றும் அதனுடன் தொடர்புற்ற உட்கட்டமைப்புக்களுக்கான முதலீடு இக்கால கட்டத்தில் மொத்தமாக இலங்கை ரூபாவில் ஒரு டிரிலியன் இலும் (கிட்டத்தட்ட 8.9 பில்லியன் அமெரிக்க டாலர்களிலும்) அதிகமானதாக இருப்பதோடு, நகரத் திட்டமிடல், வீடமைப்பு, குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகளை இது நிவர்த்தி செய்யும். இவ் இலக்குகள் புதிய நகரங்களை உருவாக்குதல், 600,000 இற்கும் அதிகமான வீடமைப்புப் பிரிவுகளை நிர்மாணித்தல் மற்றும் இலங்கையை “ஆசியாவின் வியப்பு” ஒன்றாக மாற்றுதல் என்பவற்றையும் இவ் இலக்குகள் உள்ளடக்கியுள்ளன.

இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கத்திற்கு இயலளவுகளை வலுப்படுத்துதல்

தேசிய காலநிலை மாற்ற இசைவாக்க உபாயம்

உபாய வழியின் பிரிவு **#2**

# காலநிலை மாற்ற விளைவுகள்

காலநிலை மாற்ற விளைவுகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைவதுடன், எதிர்வரும் சில தசாப்தங்களில் இது மேலும் மோசமடையும். இந்நிலை, எமது மனித குடியிருப்புக்களையும் மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்திட்டங்களையும் அச்சுறுத்தலாம். பல துறைகளுக்கும் இடையில் இவ் விளைவுகள் எவ்வாறு குறுக்கறுக்கின்றன என்பதை நாம் ஏற்கெனவே வெளிப்படையாகக் கண்டுகொண்டிருக்கின்றோம். பொதுவாக, நாடு ஏற்கெனவே எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை இவை மேலும் மோசமாக்கும். காலநிலை மாற்ற விளைவுகள் பின்வரும் விடயங்களையும் உள்ளடக்கியிருக்கும்:



*Photo Credit*: Studio Times Ltd.

- வெள்ளப்பெருக்கும், மண்சரிவுகளும் அதிகம் பொதுவானதாகவும், அதிக தாக்கம் கொண்டதாகவும் மாறுவதோடு, அதிக மக்களை இடம்பெயரச் செய்வதாகவும் மற்றும் சொத்துக்களுக்கு அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்துவிடும். (இதனால் ஏழைகள் அதிகம் பாதிக்கப்படுவார்கள்).
- வரட்சியும் அதிகம் பொதுவான ஒன்றாகவும், கடுமையானதாகவும் மாறுவதோடு, நமது சுத்தமான நீர் வளங்களில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்துவதாகவும் இது அமையும். அத்துடன், இது விசேடமாக உலர் வலயம் மற்றும் இடை வலயங்களில் குடிநீருக்கான தொர்ச்சியான மற்றும் பாரிய தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும்.
- வெப்பநிலை அதிகரிப்பானது, குளிராக்கல் நோக்கத்திற்கு மின்சார நுகர்வுக்கான அதிக கேள்வியை ஏற்படுத்தலாம்.
- நுளம்புகள் மற்றும் எலிகள் போன்ற நோய்க் காவும் விலங்குகள் விரைவாக பெருகி அதிக பிரதேசங்களுக்கு பரம்பலடையும். இதனால் டெங்குக் காய்ச்சல் மற்றும் "லெப்டஸ்பைரோசிஸ்" போன்ற பொது சுகாதார நெருக்கடிகளுக்கும் இது வழிவகுக்கும்.
- நீண்டகால அளவில், உயர்வடையும் கடல் மட்டத்தினால் கரையோர குடியிருப்புக்களும், உட்கட்டமைப்புக்களும் பாதிப்படைய வாய்ப்பிருப்பதோடு, இப் பிரதேசங்களில் வாழும் அல்லது தொழில் செய்யும் மக்களின் வாழ்வதாரத்தையும் இது பாதிப்படையச் செய்யும்.

அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இவ் விளைவுகளை எந்தவொரு துறையும் அல்லது நிறுவனமும் தனித்து நின்று தாக்குப்பிடிக்க முடியாது. இதற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்று அவசியமாகின்றது: காலநிலைக்குத் தாக்குப்பிடிக்கின்ற திறன்கொண்ட மற்றும் சுகாதாரமான மனிதக் குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான திடமான முயற்சிகளின் மூலம் மட்டுமே இலங்கை அதன் தேசிய ஆர்வங்களை உறுதிப்படுத்த முடியும் மற்றும் தற்போதைய, எதிர்கால காலநிலை மாற்றங்களினால் இவை ஆபத்திற்குள்ளாகாமல் தடுக்க முடியும்.

திட்டமிடல், வீடமைப்பு, நீர் விநியோகம், வடிகால், சுகாதாரம், வீதிகள் மற்றும் பல்வேறு ஏனைய துறைகளில் உள்ள பிரச்சினைகளை உள்ளடக்கி துறைகளுக்கு இடையிலான உரிய காலத்திற்குரிய தலையீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.



*Photo Credit*: Studio Times Ltd.

# விடயத் தலைப்பு



தேசிய காலநிலை மாற்ற இயல்பாக்க உபாயத்தை தயார் செய்வதற்கான மதியுரை பெற்றுக்கொள்ளல் செயன்முறையின் போது, முக்கிய பிரச்சினைகளையும், இசைவாக்கச் செயற்பாடுகளையும் பங்களிப்பாளர்கள் அடையாளங் கண்டார்கள். இவற்றை பின்வரும் விடயத் தலைப்புக்களில் ஒன்று சேர்க்க முடியும்.

### குடியிருப்புக்களின் காலநிலை மாற்ற இயல்பாக்கத்திற்கு பங்களிப்பாளர்களை அணிதிரட்டல்

இலங்கையில், உள்ளூர் சமூகங்களை ஈடுபடுத்துவதற்காக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் உள்ளூர் அரச அமைப்புக்கள் போன்ற நிறுவனக் கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. கீழ் மட்ட இணைப்புக்களுடன் சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் காணப்படுகின்றன. ஆனால், மனிதக் குடியிருப்புக்களில் காலநிலை மாற்ற இயல்பாக்கத்திற்கு பங்களிப்பாளர்களை அணிதிரட்டுவதற்காக இவற்றை பயனுள்ள விதத்தில் பயன்படுத்த வேண்டியுள்ளது.

### காலநிலை மாற்ற கரிசனைகளை உள்வாங்குவதற்காக திட்டங்களை மேம்படுத்தல்

இலங்கையில் தற்போது காலநிலை மாற்றம் தொடர்பான விளைவுகள் பற்றி மனித குடியிருப்புத் திட்டமிடல்களின் போது கருத்திற்கொள்ளப்படுவதில்லை. அதுமட்டுமன்றி, பிரதான நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், "நகர அபிவிருத்தி அதிகார சபையின்" கீழ் வரும் பிரதேசங்களை மட்டுமே உள்ளடக்கி விருத்தி செய்யப்படுகின்றன. எம்மிடம் காலநிலைக்கு தாக்குப்பிடிக்கின்ற நிர்மாண முறைகள் மற்றும் நிபுணர்கள் காணப்படுகின்ற போதும் அவை பரவலாகப் பயன்படுத்தப்படுவதில்லை. ஒட்டுமொத்தமாக, நீண்ட கால அளவில் காலநிலைக்கான தாக்குப்பிடித்தற் திறனுக்கும், இயல்பாக்கத்திற்கும் அதிக அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

### குடியிருப்புக்களுக்கு போதிய அளவில் மற்றும் போதிய தரத்தில் நீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல்

சகல மனிதக் குடியிருப்புக்களுக்கும் நீர் அவசியமாகின்றது – எனவே நகரங்களுக்கு அதிக நீர் தேவைப்படுகின்றது. ஏற்கெனவே அழுத்தத்தில் உள்ள நீர் விநியோகத்திற்கு காலநிலை மாற்றம் மேலும் பிரச்சினைகளை தோற்றுவிக்கலாம். இதற்கு முகங்கொடுப்பதற்கு, நீரேந்து பகுதிகள் மற்றும் நீர் மூலவளங்கள் என்பவற்றின் முகாமைத்துவத்தை நாம் மேம்படுத்த வேண்டும் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட நீர் வள முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். உயிரியல் மற்றும் இரசாயனவியல் நீர் மாசடைதல்கள் மற்றுமொரு பிரச்சினையாகும்: நீரின் தரத்தை பல நிறுவனங்கள் கண்காணிப்புச் செய்கின்றபோதிலும், இம் முயற்சிகள் ஒன்றுசேர்க்கப்படாத ஒன்றாகவும், ஒருங்கிணைக்கப்படாத ஒன்றாகவுமே காணப்படுகின்றது மற்றும் இந் நிறுவனங்கள் தரவுகளை தமக்கிடையே தொடர்ச்சியாக பகிர்ந்துகொள்வதும் இல்லை. நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு என்பனவும் அதிக பலத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

### குடியிருப்புக்களில் காலநிலை மாற்றம் தொடர்பான சுகாதார ஆர்வங்களை எதிர்கொள்ளல்

அண்மைய தசாப்தங்களில், உரிய வலய பிரிப்புக்கள் மற்றும் திட்டமிடல்கள் இன்றி மனிதக் குடியிருப்புக்கள் விரைவாக விரிவுபடுத்தப்பட்டுவருகின்றது. இதனால் சூழல் அழிக்கப்படுவதோடு, காவிகளால் பரப்பப்படும் நோய்கள் பரவுவதற்கும் வழியேற்படுத்தப்படுகின்றது. என்றாலும், இவற்றிற்கிடையிலான தெளிவான இணைப்புக்கள் இன்னும் விளங்கிக்கொள்ளப்படவில்லை. இவ் இடைவெளியை நிவர்த்திப்பதற்கு, சுகாதாரத் தொழிற்துறையாளர்கள் உள்ளூர் மட்ட பௌதிகத் திட்டமிடல்களில் இன்னும் அதிகமான ஈடுபாட்டை காட்ட வேண்டியது அத்தியாவசியமானதாகும். துறைகளுக்கிடையில் நியமப்படுத்தப்பட்ட தரவுகளை பகிர்ந்துகொள்வதற்கு, (சுகாதார வைத்திய அதிகாரியின் பிரதேசம் எனப்படும்) சுகாதாரத் துறையின் பௌதிக பிரிப்புக்களுடன், பிரதேச செயலாளர் பிரிவு என்றழைக்கப்படும் நிர்வாகப் பிரிப்புக்கள் ஒத்திசைய வேண்டியது சிறப்பானதாகும்.

### பாதிப்புக்குள்ளாகும் தன்மை மற்றும் குடியிருப்புக்களின் இசைவாக்கம் தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தல்

மனிதக் குடியிருப்புக்களில் மற்றும் ஆரோக்கியத்தில் காலநிலை மாற்ற விளைவுகள், அங்கும் இங்கும் பரவலாக மற்றும் பொருத்தமற்ற வழிகளில் தென்படத்துவங்கியுள்ளன. இதனால் இது தொடர்பான பின்னணிச் செயன்முறைகளை, அரச நிறுவனங்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் பொதுமக்கள் அறிந்து, விளங்கிக்கொள்வது கடினமானதாக உள்ளது. உரிய காலத்தில் தகவல்களை சேகரித்து, பகுப்பாய்வு செய்து வழங்குதன் மூலம் மக்கள் இதனை இலகுவாக விளங்கிக்கொள்வதற்கு உதவியளிக்க முடியும். இந்த அறிவுக்கான அதிகாரபூர்வ வளங்கள் ஊடகங்கள் போன்ற வினைதிறனாகப் பரம்பலடையச் செய்யும் பொறிமுறைகளுடன் சிறப்பாக இணைக்கப்பட வேண்டியுள்ளது.



*Photo Credit:* Indika Wanniarachchi



*Photo Credit*: Studio Times Ltd.

இறுதியில், இலங்கையில் காலநிலைக்குத் தாக்குப்பிடிக்கும் திறன் கொண்ட மற்றும் ஆரோக்கியமான நகரங்களை உருவாக்குவதற்கு, அனர்த்த அபாயக் குறைப்பு அணுகுமுறைகளுடன் சூழல் மற்றும் சமூக நின்று நிலைப்புக்கான அடிப்படைக் கொள்கைகளை ஒன்றிணைந்த செயற்பாடு ஒன்று அவசியமாகின்றது.

காலநிலை மாற்றத்தின் நிச்சயமற்ற விளைவுகளுடன் வாழ்வது மற்றும் அதற்குத் தாக்குப்பிடிப்பது என்பது தொடர்ந்தும் தெரிவொன்றாக அமையாது; மாற்றமாக அது அத்தியாவசியான விடயம் ஒன்றாகவே மாறியிருக்கின்றது. பொருளாதார அபிவிருத்தி தங்குதடைகள் அல்லது பின்னடைவுகள் இன்றி தொடர்வதற்கு மற்றும் வறுமை ஒழிப்பு, உணவும், நீர் பாதுகாப்பும் மற்றும் பொது சுகாதாரம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் அழிவடையாவண்ணம் பேணப்படுவதற்கு, காலநிலை மாற்றங்களுக்கு இலங்கை இசைவாக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகின்றது.


ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப உதவிக்கான செயற்திட்டம் ADB TA 7326 SRI: “இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கத்திற்கான இயலளவுகளை வலுப்படுத்துதல்” செயற்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் இத் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

நிலையான பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் அதேநேரம், காலநிலை மாற்ற விளைவுகளுக்கு தாக்குப் பிடிக்கும் திறனை இலங்கையில் அதிகரிப்பதற்கு காலநிலை மாற்ற இசைவாக்கத்திற்கான தேசிய உபாயங்களை உருவாக்குதற்காக இலங்கை சுற்றாடல் அமைச்சுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி பணியாற்றுகின்றது. இசைவாக்கங்களை ஏற்படுத்தும் பட்சத்தில், சூழல் முகாமைத்துவத்தின் மேம்படுத்தப்பட்ட விளைவுகள் மற்றும் இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பாளர்களை சிறப்பாகத் தயார்படுத்தப்படுத்தல் என்பற்றை இவ் உபாயம் ஊக்குவிக்கும்.



**மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்:**

காலநிலை மாற்றத்திற்கான செயலகம், சுற்றாடல் அமைச்சு

முதலாம் மாடி, 980/4 A, விக்ரமசிங்ஹ பிளேஸ், அதுல் கோட்டை, கோட்டை, இலங்கை.

தொலைபேசி:: +94 11 2883 481 மற்றும் +94 11 2883 368

இணையம்: http://www.climatechange.lk/adaptation/